# கவிதை எழுதுவோம்...!

கவிதை - ஓர் அறிமுக அமர்வு

நாள் : 24.07.2020
நேரம் : மாலை 3.00 முதல் - மதியம் 4.30 வரை



**கவிதை என்பதை** துல்லியம் என்றும் சொல்லலாம். நாம் பார்க்காத கோணம் என்றும் சொல்லலாம், மிகப் பெரியதை மிகச் சிறியதில் சொல்வது என்றும் கூறலாம். வசீகரத் தத்துவம் என்று சொல்லலாம். "பனித்துளியில் தெரியும் பனைமரம்" என்று சுந்தரராமசாமியை துணைக்கு அழைக்கலாம். மொழி தீப்பிழம்பாகும் தருணம் என்றும் சொல்லலாம். மொழியின் பாலைவனத்தில் ஒற்றைக் கண்ணீர்த் துளி என்றும் கவிதையைச் சொல்லலாம்.

**கவிதை எப்பொழுது பிறந்திருக்கும்?** நம் மூதாதையர், ஆதிக் குகை இருட்டில் தாங்கள் வேட்டைக்குப் போய் திரும்பிய அனுபவத்தை தங்கள் சந்ததியினரிடம் விவரிக்கும்பொழுது, அந்த வர்ணனையில் பிறந்திருக்கலாம், சொல்ல முடியாத துயரத்தை மொழியின் முதுகில் ஏற்றிப் பார்க்கலாம் என்ற ஆசையில் பிறந்திருக்கலாம், ஆயிரம் ஆண்டுகள் தாண்டி நிற்கட்டும் தன் சொல் என்ற இறுமாப்பில் தோன்றியிருக்கலாம், தேசத்தையே கடல் கொண்டாலும் சுவடிவழி நான் உயிர் வாழ்வேன் என்ற அபார நம்பிக்கையில் எழுதப்பட்டிருக்கலாம்.

வருடம் தோறும் 75, 000 குழந்தைகளோடு பணியாற்றும் சாந்தி ஆசிரம் பல்வேறு வகையில் குழந்தைகளின் உடைய **தனித்திறமையை வெளிக்கொணர** தொடர்ந்து 34 வருடமாக முயற்சி செய்து வருகிறது கோடை கால பயிற்சி முதல் கொரோன கால நிகழ்நிலை முயற்சி வரை...!
தமிழ் மொழியின் ஈடுபாட்டை வளர்க்கும் நோக்கத்திலும் சொல், கற்பனையின் வளத்தை கூட்டும் முயற்சியிலும் குழந்தைகளிடம் உள்ள கற்பனை திறனை தாய்மொழியான தமிழில் அழகாக எடுத்துசொல்லும் முயற்சியே இந்த **' கவிதை எழுதுவோம் '**

## நிகழ்ச்சி நிரல்

2.45: கூடும் நேரம்

3.00: பிரார்த்தனை
திரு.செந்தில் குமார்,தன்னார்வலர், சாந்தி ஆசிரம்

3.05: அறிமுகம் மற்றும் வரவேற்பு
செல்வி. சாஸ்வதா சுருதி, தன்னார்வலர், சாந்தி ஆசிரம்

3.10: கவிதையின் தோற்றமும் அதன் வகைகளும்
திரு. ஆகாஷ், தன்னார்வலர், சாந்தி ஆசிரம்

3.20: கவிதை எழுதுவோமா?
திரு. விஜயராகவன் கோபால், தலைவர், இளைஞர் தலைமைப்பண்பு திட்டம், சாந்தி ஆசிரம்

4.00: இளம்கவிஞர்களோடு கலந்துரையாடல்
நடுவர் : திரு. குருபரன், தன்னார்வலர், சாந்தி ஆசிரம்
திரு.முனிவேல் ராஜ், திரு. ஆதித்ய நாராயணன்,செல்வி. சந்தியா, செல்வி. கௌசல்யா, செல்வி. கருணாம்பிகை ,தன்னார்வலர்கள், சாந்தி ஆசிரம்.

4.20 : கேள்வி நேரம்!

4.30 : நிறைவுக் கவிதை
செல்வி.நர்த்தனா தங்கம், தன்னார்வலர், சாந்தி ஆசிரம்

Shanti Ashram
Gandhian center for development, learning and collaboration